# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UGC RECOGNISED JOURNAL**

**UGC NO : 42330**

## நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

ஈரோடு-52

3

**தமிழ்த்துறை**

## தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டு விழுமியங்கள்

மார்ச், 22 - 2019



மார்ச் - 2019

visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

**UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது**

**UGC RECOGNISED JOURNAL**

**UGC NO : 42330**

மலர் : 7 | மார்ச்-2019 | இதழ் : 3

பதிப்பாசிரியர்

நல் நடராசன்

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549

97919 51549, 63817 01339

பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை,

கல்யாண் சில்க்ஸ் எதிரில்,

ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com

ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gamil.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gamil.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gamil.com

# பொருளடக்கம்
# CONTENT

1. தமிழ் திரை இசையின் தற்போதைய வளர்ச்சி நிலை

*K.ராஜேஸ்பாபு - 1

2. விவிலிய நற்செய்தியில் நாட்டிய நாடகங்கள்

*S. சாராள் - 5

3. கமகங்களும் ராக ரச உணர்வு நிலைகளும்

*முனைவர் வே.வேங்கடலட்சுமி - 8

4. மா.நடராசன் படைப்புகளில் பண்பாட்டு விழுமியங்கள்

*அ.செந்தில் குமார் *நெறியாளர் முனைவர் த.பாலமுருகன் - 11

5. திருவிழாக்களின் மரபு மாறாத நாதஸ்வரத்தில் மல்லாரி

*S.T. மூர்த்தி - 13

6. பெண் கவிஞர்களின் படைப்பாக்கத்தில் சமூக விழுமியங்களும், பாடுபொருளும்

*பேரா.கி.சதீஷ்குமார் - 15

7. 'புதிய மொட்டுகள்' புதினத்தில் சமூகச் சீர்திருத்தப் பண்பாடு

*முனைவர் ப.அன்பரசி - 19

8. வளையாபதி புலப்படுத்தும் கற்பு விழுமியங்கள்

*முனைவர் பொ.வெங்கடேஸ்வரி - 23

9. திருமூலரின் சன்மார்க்கநெறி

*முனைவர் வெ.பிரேமசுதா - 26

10. இலக்கியங்களில் யாழ் இசைக்கருவி

*முனைவர் P.நடராஜன் - 29

11. தொல்காப்பியத்தில் கணக்கீட்டு முறை

*முனைவர் தி.சுகுமாரன் - 32

12. கலித்தொகையில் பண்டைத்தமிழரின் பண்பாட்டுவிழுமியங்கள் ✓

*முனைவர் சு.செல்வக்குமார் - 35

13. தேவாரத்தில் அகமரபுகள்

*சவிதா.ப - 38

14. ஆத்தங்கரை ஓரம் - நாவலின் கதைப்பின்னல் ஒரு கண்ணோட்டம்

*முனைவர் மு.கருப்புசாமி - 41

15. இருளர் பழங்குடி மக்கள் - ஓர் அறிமுகப் பார்வை

*சி.சோமசுந்தரம் - 44

# கலித்தொகையில் பண்டைத்தமிழரின் பண்பாட்டுவிழுமியங்கள்

*முனைவர் சு.செல்வக்குமார், உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

மனிதர்கள் ஒன்றாகக் கூடி நெடுங்காலம் ஓரிடத்தில் வாழத்தொடங்கும் போது அவர்களுக்குள்ளே ஓர் இணக்கத்தன்மை நிகழவும் அவர்கள் சிறப்புடனும் வெற்றியுடனும் வாழவும் சிறந்தபண்புகளை அல்லது ஒழுகலாறுகளை அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய தேவை எழுகிறது. நாளடைவில் அத்தன்மைகள் அம்மக்களுக்கே உரித்தானஅடையாளங்களாக, பண்பாடுகளாக அமைகின்றன.

'பண்பாடு'என்ற சொல்லானது தற்காலத்தில் பலவாறான விளக்கங்களுக்கு உட்படுத்தப்படுகின்ற சொல்லாகமாறியுள்ளது. 'பண்பு'என்றசொல்லைத்தான் 'பண்பாடு'என்றசொல்லானது அடியாகக் கொண்டுள்ளது. பண்பாடுஎன்றசொல் கடந்த நூற்றாண்டில் (1937)டி.கே.சிதம்பரம்பிள்ளை அவர்களால் ஆங்கிலத்தில் உள்ளஉரடவரசந என்றஆங்கிலச்சொல்லுக்கு இணையாகத்தமிழில் உருவாக்கப்பட்டதுஎன்பது பேரா. வையாபுரிப்பிள்ளையின் கருத்து. (வே.முத்துலக்குமி,பண்பாட்டுச்சிந்தனைகள்,ப.12.)

தமிழ் இலக்கண, இலக்கியங்களில் பண்பாடுஎன்றசொல் கையாளப்பெறவில்லை. பண்புஎன்றசொல்தான் பொறியானுணரப்படும் குணம்,முறைமையறிந்துநடக்கும் குணம்,உலகவழக்கம் அறிந்துநடத்தல்,பெருமைசான்றசான்றாண்மைத்தன்மையுடன் ஒத்துஒழுகுகின்ற இயல்புஎன இடத்திற்கேற்பப் பொருள் வழங்கும் சொல்லாகக் கையாளப்பட்டுவந்துள்ளமைக்கு,

> இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி (தொல்.சொல்.நூற்.1).
>
> பாடறிந்து ஒழுகும் பண்பினரே (புறம்.197)
>
> பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் (கலி.133)
>
> ஒத்தபண்பினர் ஒன்பதுமன்னர் (சிலம்பு.27.119)

என்றஅடிகள் சான்றுகளாகஅமைகின்றன.

"பண்புஎன்றசொல்லோடு'படுதல்'என்னும் சொல் இணைந்துபண்பு + பாடு= பண்பாடு என அமையக்காண்கிறோம். (உடன்+ படுதல்= உடன்பாடு:முரண்+ பாடு= (முரண்பாடு). 'இலம்பாடு'என்ற சொல்லானது சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. படுதல் என்பதற்குத் தோன்றுதல்,பெற்றிருத்தல் எனப்பொருள் கூறலாம். பண்பு+ படுதல்= பண்பினைப்பெற்றிருத்தல் பண்பாடுஎனப்பொருள் கொள்ளலாம்"என்று கூறும் மு. சந்தானம் (தமிழர் பண்பாடு ப.1) அவர்களின் கருத்துபண்பாடுஎன்றசொல்லைப்புரிந்துகொள்ளத் துணைசெய்யும்.

குறிப்பிடத்தக்கவகையில் பண்புகளைப் பெற்றுவாழும் மக்கள் ஒருவகைப்பண்பாட்டினராகக் கருதப்படுகின்றனர். பண்பாடு என்பது அந்தந்த மக்களின் உள்ளம் சார்ந்த உணர்வுகளாக, கருத்துக்களாக அமையக்கூடியதாகும் அவர்களின் உணர்வுகள், கருத்துக்களுக்கேற்பவே அவர்களின் செயல்பாடுகள் உருவெடுக்கின்றன.

மக்கள்தான் வாழுகின்ற வாழிடச்சூழலுக் கேற்ப உடன் வாழும் மனிதர்களோடு ஓர் ஒத்திசைவு பெற்றுநடந்து கொள்ள ஏற்படுத்திக்கொள்ளும் நடத்தைமுறைகள்,மனிதவாழ்வின் மேன்மைகளாகக் கருதி அவர்கள் கொண்டுள்ள உணர்வுகள், எண்ணங்கள், வாழ்வில் தடையின்றி நடைபோட அவர்கள் கொண்டுள்ள தெய்வம், கடவுள், நிமித்தம் தொடர்பான நம்பிக்கைகள், வாழ்க்கைகுறித்த புரிதல்கள், அறங்கள் ஆகியகாரணிகள் அவர்களுக்கான பண்புகளை உருவாக்குகின்றன. அத்தகைய பண்புகளின் செயல் வடிவமாக அவர்களுக்கான பண்பாடு கட்டமைகிறது. மக்களின் உள்ளம் சார்ந்த தன்மைகளை அகப்பண்பாடு என்றும் அவர்களின் புறவளர்ச்சி சார்ந்த தன்மைகளை புறப்பண்பாடு என்றும் அழைக்கின்ற போக்கும் உள்ளது. 'விழுமியம்'என்றசொல் விழுமம் என்றசொல்லின் அடியாகப் பிறந்ததுஎனலாம். விழுமம் என்பதற்கு உயர்வு, சிறப்பு, மேன்மை, சீர்மை எனப்பொருள் கொள்ளப்படுகிறது. இத்தகைய புரிதல்களோடு தமிழில் சங்ககாலத்தே தோற்றம் கொண்ட கலித்தொகை என்னும் இலக்கியப் பனுவலை வாசிக்கும்போது பண்டைத்தமிழரின் பண்பாட்டுவிழுமியங்கள் பல காணக்கிடைக்கின்றன.

ஈகைப்பண்பு

இல்லறக்கடமைகளைச் சிறப்புறச் செய்வதற்காகத் தலைவன் தலைவியைவிட்டுப் பொருள் தேடுவதற்காகப் பிரிகிறான். அப்போது தோழி தலைவனைப் பார்த்துப் பேசும்போதுஅவனின் பொருள் தேடும் நோக்கத்தைஒரேபாடலில் மூன்று இடங்களில் எடுத்துக் காட்டுகிறாள். அவை,

'தொலைவுஆகி இரந்தோர்க்குஒன்றுஈயாமை இழிவு'

'இல் என இரந்தோர்க்குஒன்றுஈயாமை இழிவு'

'இடன் இன்றி இரந்தோர்க்குஒன்றுஈயாமை இழிவு'(கலி.2)

என்ற அடிகளே ஆகும். இவ்வடிகள் அக்காலத்தில் ஓர் இல்லறத்தான் என்பவன் பொருள் இல்லாதவறியவர்களுக்குப் பொருள்கொடுத்து உதவும் பண்பாட்டைக் கொண்டுள்ளான் என்பதையும் அவ்வாறு பொருள் கொடுத்துஉதவாததன்மை இழிவானது என்பதை உணர்ந்தவன் என்பதையும் உணர்த்திநிற்கின்றன சங்ககாலத்தில் 'ஈகை'என்பதுஒருதலையாயபண்பாட்டுணர்வுஎன்பதற்கு இப்பாடல் சான்றாகிறது.

விருந்தோம்பும் பண்பு

ஒருகுடும்பத்தலைவனுக்குஈகையைப் போலவேதன் இல்லத்திற்குவரும் விருந்தினர்களைப் பேணுவதும் சிறந்தபண்பாகும்: அதுமட்டுமல்லஅதுவேநிலைபேறுடைய பொருளுமாகும் என்பதைத் தோழிபொருள் தேடக் கருதியதலைவனுக்கு,

மன்னவன் புறந்தரவருவிருந்துஓம்பி

தன் நகர் விழையக் கூடின்

இன் உறல் வியன்மார்ப! அதுமனும் பொருளே (கலி.8)

என்றவாறுஎடுத்துக்காட்டுகிறாள்.வள்ளுவரும் இக்கருத்தை,

வருவிருந்துவைகலும் ஓம்புவான் வாழ்க்கை

பருவருந்துபாழ்படுதல் இன்று (குறள்-83)

என்ற குறட்பாவில் கூறுவது எண்ணிப்பார்க்கத்தக்கது. விருந்தினரைப் பேணுவதைச் சிறந்தபண்பாகச் சங்ககால மக்கள் கருதினர் என்பதை இவ்வடிகள் வெளிப்படுத்துகின்றன.

இல்வாழ்க்கையே சிறந்த அறம்

உரியவயதில் ஓர் ஆணும்பெண்ணும் மனமொத்தவர்களாய் இணைந்து இல்வாழ்க்கையைத் தொடங்குவதே அறங்களுள் சிறந்தஅறம் என்பதை,

இறந்தகற்பினாட்குஎவ்வம் படரன்மின்

சிறந்தானைவழிபடீஇச் சென்றனள்

அறம் தலைப்பிரியாஆறும் மற்றுஅதுவே...(கலி.9)

என்ற அடிகளில் முக்கோல் வைத்திருக்கும் அந்தணர் கூற்றாகக் கலித்தொகை எடுத்துரைக்கிறது. இவ்வறவுணர்வும் பண்டைத்தமிழரின் பண்பாட்டுணர்வுகளில் ஒன்றென்பது இங்கு விளக்கமாகிறது.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்பதில்லாயின் நன்று (குறள்.49)

இல்லறமல்லதுநல்லறமன்று

ஆகிய தமிழ்ப்பனுவல் தொடர்களும் இவ்வறத்தைப் போற்றுவது குறிப்பிடத்தக்கது

நம்பிக்கைகள்

மக்களின் மனஉணர்வோடு தொடர்புடையவைதான் நம்பிக்கைகள். கடவுள்,தெய்வம், நிமித்தங்கள் போன்றவற்றின் மீதுமக்கள் கொண்டுள்ளநம்பிக்கைகள்வலுவானவை. அவைஅவர்களின் வாழ்க்கைக்கு ஊன்றுகோலாகவும் பாதைகளாகவும் அமைவனஎன்றால் அதுமிகையல்ல. சங்ககாலத்தில் தலைவியின் வருத்தத்தை நீக்குவதற்காக நிமித்தங்களைச் சுட்டிக்காட்டித் தலைவன் விரைவில் வந்துவிடுவான் எனத் தோழி தலைவியைத் தேற்றுவதாக இடம்பெறும்,

இணைநலம் உடையகானம் சென்றோர்

புனைநலம் வாட்டுநர் அல்லர்: மனைவயின்

பல்லியும் பாங்குஒத்து இசைத்தன்

நம் எழில் உண்கணும் ஆடுமால் இடனே.(கலி.11)

என்ற கலித்தொகை அடிகள் வாயிலாக அக்காலமக்களின் நம்பிக்கைகுறித்த பண்பாட்டுணர்வு வெளிப்படுகின்றது

இல்லற இன்பவாழ்க்கையைப் போற்றுதல்

'இருபதில் அறுபதுபோலவும் அறுபதில் இருபதுபோலவும் இருக்கக் கூடாது'என்று ஒருபழமொழிஉண்டு திருமணம் முடிந்த அண்மைக்காலத்திலேயே தலைவியைப் பிரிந்துபொருள் தேடப் பிரிகின்ற தலைவனுக்குத் தோழி அறிவுரைவழங்கும் தன்மைபின்வருமாறு:

உரனுடைஉள்ளத்தை: செய்பொருள் முற்றிய

வளமையான் ஆகும் பொருள் இது என்பாய்!

இளமையும் காமமும் நின்பாணிநில்லா

இடைமுலைக் கோதைகுழையமுயங்கும்

முன்றாள் கழிதல் உறுகலமைக் கனைபடு
கடைநாள் இது என்றுஅறிந்தாரும் இல்லை
போற்றாய் பெரும! (கலி.12)

“இளமையும் காமமும்நின்றுநிலைக்காது, இருக்காது. இன்றின் கடைநாள் எதுவென்பதும் அறியாது. ஆகவே இல்லத்திலிருந்து தலைவியுடன் கூடி இன்பம் துய்க்கவேண்டும். செல்வம் தேடச்சென்று இல்லற இன்பத்தைத் தவறவிடக்கூடாது” என்றுதோழி தலைவனிடம் எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ள இக்கலியடிகளின் வழி பண்டைத் தமிழரின் இல்லற இன்பவாழ்வின் மீதான அக்கறையைப் புலப்படுத்துகிறது.

கற்புடைப்பெண்டிரின் மாண்புபோற்றுதல்

தலைவன் மீதுமிகுந்தஅன்புகொண்டுதலைவியின் நலனும் இல்லறமும் சிறந்தோங்க கற்புடைப்பெண்டிரை மாண்புடையவராகநோக்கும் பண்பு பண்டைத்தமிழரின் பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்றாக விளங்கியுள்ளமையை

செய்பொருள் சிறப்புஎண்ணிச் செல்வார் மாட்டு, இனையன
தெய்வத்துத் திறன் நோக்கித் தெருமரல் தேமொழி!
‘வறன் ஓடின் வையகத்துவான்தரும் கற்பினாள்
நிறன் ஓடிப் பசப்புஊர்தல் உண்டு’என
அறன் ஓடிவிலக்கின்று அவன் சூழ்வினைத் திறத்தே (கலி.16)

என்ற பாடலடிகள் வழி அறிந்துகொள்ளலாம். “வறட்சிமிகுந்து துயருற்றகாலத்தும் வையம் கெட்டாலும்,அந்நிலையகத்தில் மழையைப் பெய்விக்கும் கற்பினையுடைய பெண்ணின் அழகுகெட்டு பசலைபாய்ந்துவிடுதல் நிகழும் என்றுஅறக்கடவுள் தானேகருதித்தலைவனின் முயற்சி இடத்தே விரைந்து சென்று விலக்குகின்றது. ஆகையால் நீயும் அத்தகையவள் ஆதலால் அறக்கடவுள் உனக்கும் தலைவனுக்கும் துணைநிற்கும்”எனத் தலைவியைத் தோழி ஆறுதல்படுத்துவதாக அமைவன இவ்வடிகள். இக்கலித்தொகை அடிகள் வாயிலாகச் சங்ககாலத்தில் கற்புநெறியைச் சிறந்ததாகப் போற்றுவது பண்டைத்தமிழரின் பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்றாக விளங்கியுள்ளமை தெளிவாகிறது.

மானுடத்திற்கான உயர்பண்புகள்

மானுட இனமுழுமைக்குமான பண்புகளைக் கலித்தொகைப் பாடலொன்று பட்டியலிட்டுள்ளது.

‘ஆற்றுதல்’என்பதுஒன்றுஅலந்தவர்க்குஉதவுதல்;
‘போற்றுதல்’என்பதுபுணர்ந்தாரைப் பிரியாமை;
‘பண்பு’ எனப்படுவதுபாடுஅறிந்துஒழுகுதல்;
‘அன்பு’எனப்படுவதுதன்கிளைசெறாஅமை;
‘அறிவு’எனப்படுவதுபேதையர் சொல் நோன்றல்;
‘செறிவு’எனப்படுவது கூறியதுமறாஅமை;
‘நிறை’எனப்படுவதுமறைபிறர் அறியாமை;
‘முறை’எனப்படுவதுகண்ணோடாதுஉயிர் வௌவல்;
‘பொறை’எனப்படுவதுபோற்றாரைப் பொறுத்தல்; (கலி.133)

ஆகியபண்புகளைஒருவரோ,ஒருமக்கள் கூட்டமோ பின்பற்றும்போதுஅவரோ,அம்மக்கள் கூட்டமோ உயர்ந்தபண்பாட்டின் வடிவமாய் விளங்கமுடியும்.

இன்பம்,பொருள்,அறம் என்றபடிநிலைகளை அடிப்படையாகக் கொண்டு அனுபவம், அழகியல், அறிவு ஆகியவற்றின் கலவையாய் அமைந்து தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட சங்கஇலக்கியப் பனுவல்களுள் கலித்தொகையும் சிறந்து விளங்குவதாக உள்ளது. இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்ட பண்பாட்டுக்கூறுகளைப்போல இன்னும் பலபண்பாட்டுக்கூறுகள் கலித்தொகையில் உள்ளன. இந்நூலிலுள்ள பண்பாட்டு விழுமியங்கள் தமிழர்களுக்குப் பெருமைசேர்ப்பதோடுதற்காலஉலகியல் மாந்தர்கள் அனைவரும் தங்களுக்குள்ளேஓர் உயர்வான பண்பாட்டுத்தன்மையைப் பெற்றுக்கொள்ளவும் வழிசெய்பவையாக உள்ளன என்றால் அது மிகையன்று!

**துணைநின்ற நூல்கள்**


1. கலித்தொகை- நியுசெஞ்சுரிபுக் ஹவுஸ் வெளியீடு
2. வே.முத்துலக்குமி,பண்பாட்டுச்சிந்தனைகள்,அனிதாபதிப்பகம், திருச்சி.2 2002
3. மு.சந்தானம்,தமிழர் பண்பாடு,அருளானந்தர் கல்லூரி,கருமாத்தூர்,1997